பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை 08-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 138

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1895)

★ அமெரிக்கா, கனடா, இந்தியா உள்ளிட்ட சர்வதேசம்

# அரசுக்கும், புலிகளுக்கும் அழுத்தம்

# சமாதானப் பேச்சு மிக விரைவில்

## பாலசிங்கத்தை எரிக்சோல் சந்திப்பார்

(நமது நிருபர்)

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக அரசையும், விடுதலைப் புலிகளையும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரும் கடினமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை எப்போது சந்திப்பார் என்று இதுவரை தீர்மானிக்கவில்லைஎன கொழும்பில் உள்ள நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் எமது செய்தியாளரிடம் நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியத்தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி ஆகியோரைச் சந்தித்துவிட்டுச்சென்றநோர்வேயின் சிறப்புப் பிரதி நிதி எரிக்சொல் ஹெய்ம், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை எப்போதுசந்திப்பார் என்று எமது நிருபர் கேட்டபோதே, நோர்வேயின் தூதரகப்பேச்சாளர் தோமஸ்மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே

(8ம் பக்கம் பார்க்க)

மாவனல்ல இனமோதல் சம்பவத்தைத் தொடர்ந்து

## மூதூர்பகுதியில் 17கடைகள்தீக்கிரை பொலிஸ் - இராணுவம் குவிப்பு

(திருமலை)

மாவனல்லப் பகுதியில் இடம்பெற்ற சிங்கள-முஸ்லிம்இனக்கலவரத்தைஅடுத்து திருமலை மாவட்டம் மூதூர் பகுதியில் நேற்று முன்தினம் 17கடைகள் தீக்கிரையாக்கப் பட்டுள்ளன;

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலைபிரதான வீதியில் உள்ள சிங்களவர் ஒருவருக்கு சொந்தமான மதுபானங்கள் விற்பனைநிலையம் மீதுமேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களைஅடுத்தேமேலும்நான்கு கடைகள் தீக்கிரையாக்கப் பட்டதும் இதனையடுத்து

(8ம் பக்கம் பார்க்க)

மாவனல்ல சம்பவத்தை அடுத்து

## முஸ்லிம் காங்கிரஸ் 'தனது ஆதரவை விலக்கிகொள்ளும்

(கொழும்பு)

மாவனல்லை பகுதியில் இடம் பெற்றசிங்கள முஸ்லிம் இனக் கலவரத்தை அடுத்து ஆளும் பொதுசன ஐக்கியமுன்னணி அரசிற்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கி கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது;

மாவனல்லப் பகுதியில் இடம் பெற்ற இன மோதல்சம்பவத்தின் போது பொலிஸார்முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற் பட்டுள்ளார்களென்று முஸ்லிம் தலைவர்களை குற்றம் சாட்டியுள்ளனர்;

சுயதீன பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப் பின் இந்த நிலமை ஏற்பட்டிருக்க மாட்டாதுஎன்றுமுஸ்லிம்காங்கிரஸ் சுட்டி காட்டி சுயாதீன ஆணைக்குழு நியமிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி அதனை உடனடியாக நியமிக்க வேண் டும் ஏன் று கோரியுள்ளது.ம (ம)

## பிரதி அமைச்சருக்கு நீதிமன்றம் பிடிஆணை

[புத்தளம்]

குருநாகல் மாவட்ட எம் பியும் பிரதி விவசாய அமைச்சருமான டி. எம். தஸநாயக்காவுக்கும் புத்தளம் நீதவான் பிடிஆணை பிறப்பித்துள்ளார்

பிரதி அமைச்சர் டி. எம். தஸநாயக்காவுக் கெதிரான வழக்கொன்றில் அவர் பல தடவைகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததை அடுத்து இவர்மீதான பிடிஆணை பிறப்பித்த புத்தள நீதவான் திருமதி பத்மா பாலிகா அவரைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (வ

## ஆணைக்குழு அமைக்குக

(கொழும்பு)

மாவனலல சம்பவம் தொடர்பாக நீதியரசர் ஒருவர் தலைமையில் சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்க வேண்டும் என்று ஐக்கியதேசியக் கட்சியைச்சேர்ந்த கருணாசேன கொடித்துவக்கு கோரியுள்ளார்.

சுயாதீனமான ஆணைக்குழுவை நியமிப்பதில் அரசு பின்நின்றால் சகல கட்சிகளையும் கொண்ட ஒரு ஆணைக்குழுவை நியமிக்க அரசு முன்வரவேண்டும் என்றும் கோரியுள்ளார். (வ)

அக்கினிச்சுவாலை -1 தோல்வி

## பூரண விசாரணைக்கு இராணுவ தலைமைப்பீடம் உத்தரவு!

(கொழும்பு)

தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அக்கினிச்சுவாலை-1 படை நடவடிக்கை விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப் பட்டதையடுத்து, இராணுவத்தினருக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து பூரண விசாரணை நடத்த இராணுவத் தலைமைபீடம் உத்தரவிட்டுள்ளது.

நவீன ஆயுத உபகரணங்களுடன் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் ஈடுபட்ட மேற்படி இராணுவ நடவடிக்கை எழுதுமட்டுவாழ் மற்றும் கிளாலிப பகுதிகளில் இருந்து கண்டி வீதியின் இருபக்கமாக மேற்கொள்ளப்பட்டது. திட்டமிடப்பட்ட நடவடிக்கையில் எவ்வாறு தோல்வி ஏற்பட்டதென்பது குறித்து இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு இராணுவத் தலைமைப்பீடத்தால் உத்தரவிடப் பட்டுள்ளது.

மேற்படி இராணுவ நடவடிக்கை 55வது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன, 52வது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் சிவில்வணிகசேகர, யாழ் மாவட்ட இரா

(8 ம்பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களையும் மண்ணையும் காப்பதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும்

### விருது வழங்கும் வைபவத்தில் தலைவர் 'பிரபா'

[வவுனியா]

தமிழ்மக்கள் மீதானதும்அவர்களினதுபிரதேசம்மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிரியானவன் மீண்டும் மீண்டும் மேற்கொள்வான் என்ற உண்மை நிலையைப் புரிந்து கொண்டு எமது மக்களையும் மண்ணையும்காப்பதற்குத்தயாராக வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சிறப்புவிருதுவழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளர்;

அரசினால்மேற்கொள்ளப்பட்டஅக்கினிச்சுவாலை1படை நடவடிக்கையை முறியடித்து வெற்றி வாகை சூடியவிடுதலைப் புலிகளின் படையணித்தளபதிகளுக்கு தலைவர் பிரபாகரன் விருதுவழங்கிக் கௌரவித்தார்.

இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் சிறிலங்கா அரசு தனது முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி எமது தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்த போது அதற்கு எதிராக உறுதியோடும் பொறுதியோடும் எதிர்த்துப் போராடிய படையினருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தி தமது பிரதேசங்களைக்காக்கின்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### போட்டோபிரதிகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக பட்டதாரிகள் அனைவருக்கும் துல்லியமான போட்டோப்பிரதிகளை மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து அதனுடன் புக்பைன்டிங்கும் செய்து கொள்ள, GSB தொலைத்தொடர்பு நிலையம் 444/2நாவலர் (வீதிபாப்பையாகடைச்சந்தி) யாழ்ப்பாணம். (கி-1955)

## படையினர் காயம்

(கொழும்பு)

ஓமந்தைப் பகுதியில் கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-09)

## பெண் புலிகள் மரணம்

(கொழும்பு)

கிளாலிப் பகுதியில் கடந்த ஞாயிறன்று இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் ஆறு விடுதலைப் புலிகள் பெண் உறுப்பினர்கள் பலியானதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது. (உ-09)

## உதைபந்தாட்ட போட்டிகள்

[சுண்டுக்குழி]

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் வடக்கு - கிழக்கு மாகாண உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர் வரும் 19 ஆம் திகதி தொடக்கம் மட்டக்களப்பில் இடம் பெறவுள்ளன.

இதற்கு முன்னோடியான போட்டிகள் யா/ குடா நாட்டில் இடம்பெற்று வருகின்றன. (உ-110)

### கணிப்பீட்டுத்...

2 பக்கத் தொடர்ச்சி

பாடங்களுக்கு செயன்முறை.

★ ஒப்படைகளும் கட்டுரைகளும்.

பாடசாலை மட்ட கணிப்பீட்டு திட்டத்தில் கணிப்பீடு பாட ஆசிரியரால் க.பொ.த (உயர்தரத்தில்) மேற் கொள்ளப்படும் செயறபாடுகளை கண்காணிக்க வலய கண்காணிப்புக் குழு நியமிக்கப்படும். (க)

## அறிவகம் திறப்புவிழா

(வவுனியர)

வவுனியா குருமன்காட்டில் சைவ அறிவகம ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு - புனரமைப்பு இந்து கலாசார அமைச்சின் செயலாளர் இதனைத் திறநது வைத்தார்.

சுமார் பத்து இலட்சம் ரூபா செலவில் இந்த அறிவகம் கட்டப்பட்டதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (து)

## இலவச மருத்துவ முகாம்

[வடமராட்சி கிழக்கு]

யாழ். ஊடக வியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில்இன்று இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் ஆதரவுடன், வடமராட்சி தும்பளை லூர்த்து மாதா கோயிலிலுள்ள நலன் புரிமுகாமில் இலவசமருத்துவ சேவை நடைபெறும். (இ 43)

# தமிழர் தனிநாடு கேட்பதற்கு சிங்களவரே மூலகாரணம்

## வண.புஞ்சிய தாரதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்கள் இன்று தனி நாடு கேட்பதற்கு சிங்களவர்களே காரணமாக அமைகின்றனர்.

மேற்கண்டவாறு ஹரியால பானபஹ விகாரையின் தலைவர் வண. மஹாஹல் கடவலபுஞ்சியதார தேரர் தெரிவித்துளளார்.

ஏழுகோறளைகளின் தர்ம நிலையம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் தலைமை வகித்து உரையாற்றுகையில் மேற்கண்ட வாறு தெரிவித்த அவர் மேலும் தொடர்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கலாம் எனப்பலர் தப்புக் கணக்கு போடுகின்றனர். ஆனால் விடுதலைப் புலிகளை அழிப்பது இலகுவானகாரியம் அல்ல எனவும் தமிழர்கள் தனி நாடு கேட்பதற்குநாமே வழிவகுத்தோம் இதனால் தமிழர்களுக்கு சுதந்திரமில்லை, தனிநாடு இல்லை அவர்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை இனப்பிரச்சனை தீராது நிரந்தரத் தீர்வுக்கு புலிகளின் பங்களிப்பு மிகமிக அவசியம் யுத்தத்தின் மூலம் புலிகளை வென்று பிரச்சினையை தீர்க்க முடியாது.

புத்தபகவான் காலத்தில் பல யுத்தங்கள் ஏற்பட்டன அவை பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணப்பட்டன எனவும் தெரிவித்தார். (க-06)

## சிப்பாய் காயம்

(மந்திகை)

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அண்மையில் நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு குண்டொன்று வெடித்ததில் வீதியில் ரோந்து சென்றுகொண்டிருந்தபடைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (இ-23,43

## நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தென்மராட்சி கல்விவலய தொண்டராசிரியர் விபரம்

(மத்துவில்)

தென்மராட்சி லலயத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு;

செல்வி. து. சிவபாக்கியம், ப. கிருபானந்தன், செல்வி. ச. தங்கமலர், வீ. நடராசா, செல்வி. க. கலைச்செல்வி, ச. ஆனந்தராசா, து திலீப்குமார், மா. தயாளன், செல்வி கி தானரூபி, செல்வி. சி. றஜீத்தா, செல்வி. வி மதிவதனா, செல்வி ந சடாட்சர தேவி, செல்வி த சியாமளா, இ. சிவகரன், செல்வி. இ. கோகிலா, சி. பகீரதன், செல்வி. இராஜேஸ்வரி, செல்வி. புஸ்பராணி, செல்வி. ச.வாசுகி செல்வி ப.யமிலா, செல்வி. சி. பிறேமராணி, செல்வி. சு. சுபாஜினி

செல்வி வை. ஞானகௌரி, செல்வி. கு. பத்மினி செல்வி. த. லோகேஸ்வரி, செல்வி. ச. உமாவதி, திருமதி. சி. கணேசநாதன், செல்வி. அ. கருனேஸ்வரி, செல்வி ப. விஜயகுமாரி, செல்வி. க. சந்திகா, செல்வி. க. சசியோகா, செல்வி க. மல்லிகாதேவி, திருமதி ப. தவகுமார், திரு. சி. திருநந்குமார், செல்வி. சி. நந்தினி, செல்வி. மு. சசிதேவி, செல்வி. த. பத்மலோஜனி, செல்வி. அ. ஜெயராணி, செல்வி. த. கமலநாயகி அம்மா, செல்வி. சு. சுகிதா, செல்வி. ப. சுபாஜினி லோ. இந்திரலோஜினி, திருமதி. யோ. நல்லராசா, செல்வி. க. கணேசன், திரு. யோ. உதயனன், செல்வி சு. விமலேந்தினி, திரு. து. பிரபாஸ்கரன், து. கீதாஞ்சலி. செல்வி. சு. சுதாஜினி

சி. துரைராணி, மா. இராஜேஸ்வரி. வே. லோகாம்பிகை, குபத்திரமாலாகுன்கலி சி. சரஸ்வதி, த. சிவமலர் தி. வந்தரா, மு. அமலசோதி க. இராஜேஸ்வரி, செ. ஜெசிதா, கு. பிரதீபா, க. ஜெயலட்சுமி க. செல்வரஞ்சினி கா. அகலியா, சி. சிவராணி தெ. யாழினி, மா. ஜெயந்தினி, அ. மேரினா, செ. செல்வராணி, ந. சுதர்சினி திருமதி டே. வசந்தமலர்

திருமதி சி. மகேஸ்வரன், செல்வி மேரி இமெல்டா திருமதி ப. கேதீஸ்வரன், செல்வி இ செல்வராணி ந. ஸ்ரீரஞ்சகுமார், திருமதி த. சறோஜாதேவி, செல்வி சி. பவநீதராணி, திருமதி க. துரைசிங்கம், செல்வி ஜெயசில்டா ஜோசப்பின், செல்வி பொ. கலைவாணி, திருமதி ஜெ. நந்தகுமார், வே. சி. வதனராசா, செல்வி ம. ஜெயமலர், க. தவராசா.

சி. திருச்செல்வம், திருமதி வி திருச்செல்வம், செல்வி. இ. ராகினி, செல்வி க. ஜெயலட்சுமி, செல்வி நா. ஜெயந்தி, செல்வி இ சத்தியபாமா செல்வி வ. செல்வநாயகி, செல்வி மா. பாலறஞ்சினி, செல்வி பா. பத்மவதனி, செல்வி, சி. பவீந்திரராணீ, செல்வி. சி. சிவ யோகம், செல்வி. வீ. கலைவதனி, செல்வி ப. ஜெனிற்றாபேளின் செல்வி. வி. தமிழ்ச்செல்வி செல்வி. ந. உதயகலா,

திருமதி வ. குகேந்திரன், செல்வி த. மெரீனா, செல்வி. சோ. கிருஸ்ணவேணி திருமதி ஆ. குமுதமணோகரி, செல்வி. க. தேவராணி, திருமதி. ஜெ பீற்றர் செல்வி. ப. அபர்னா, திருமதி. வ, சிவகணேசன், செல்வி, ம. மரியஜெல்ரீனா, செல்வி. சி. பவானந்தி, செல்வி. க. சுஜிதா செல்வி. ம. லூ. யசிந்தா, செல்வி. மேரி யஸ்மின் செல்வி. க. எழில்வாணி,

## வீதி ஒழுங்கு குறித்த கை நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்குரிய வீதி ஒழுங்கு பற்றிய கை நூல் ஒன்று நேற்று முன் தினம் யாழ். மத்திய கல்லூரியில் வெளியிட்டு வைக்கபபட்டது.

யாழ், மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தகுதிகாண் விரிவுரையாளர் பயிற்சிப்பட்டறைஇடம் பெற்ற போது, யாழ். செயலக உதவித் திட்டப் பணிப்பாளரும், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளருமான நா.சிவபாதசுந்தரம் மேற்படி நூலை வெளியிட்டு வைத்தார்,

மேற்படி நூலை வெளியிட்டு அங்கு உரையாற்றிய ஆணையாளர் வீதி ஒழுங்குகள் தொடர்பான போதிய அறிவின்மை யாழ் குடா நாட்டில் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும்.

வீதி ஒழுங்கு சம்பந்தமான நூலகள தற்சமயம் இங்கு பெறுவது கடினமாகவுள்ளது. அவ்வாறு பெறப்படுவன கூட எமது தாய் மொழியில் இல்லாமையால் மாணவர்கள் அவற்றை நாடுவதில்லை.

இக் குறையை இக் கைநூல் ஓரளவு பூர்த்தி செய்யும் என நம்புகின்றேன் என்றார். (உ-15)

## புலிகள் தாக்குதலில் இரு படையினர் பலி

(கொழும்பு)

எழுதுமட்டுவாள், முகமாலை மற்றும்நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய மோட்டார், ஆட்லறித் தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதாகவும் மேலும் இருவர்காயமடைந்துள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## பொதுநலவாயத்தின் செயலர் இல. விஜயம்

(கொழும்பு)

பொதுநலவாயத்தின் செயலாளர் டொனால்ட் நெஸ்லினோல்ட் இன்று இலங்கை வரவுள்ளார்.

பொதுநலவாய அரசு ராஜ்யத் தலைவர்கள் கூட்டம் தொடர்பாகப்பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இலங்கை வரும் டொனால்ட் 10 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் எனக் கூறப்படுகிறது.

ஒக்டோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் பொதுநலவாய நாடுகளின் கூட்டம் இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

## புதிய கல்விச் சீர்திருத்த கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்தும் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான கருத்தரங்கும் கலந்துரையாடலும் இன்று மு. ப 10. 00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சா. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய பொது நோக்கு'' என்ற தலைப்பில் யா/ கல்வியியற் துறையின் முதுநிலை வீரிவுரையாளர் மா. சின்னத்தம்பியும்,

'பாடசாலை மட்ட மாணவர் கணிப்பீடு' எனும் தலைப்பில் யா/ இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ. பஞ்சலிங்கமும்,

கல்வி சீர்திருத்த அமுலாக்கலில் யதார்த்த நிலை எனும் விடயத்தில் நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் மு. பஞ்சலிங்கமும்,

''ஆசிரியர் தரக்கணிப்பீடு'' என்னும் தலைப்பில் பண்ணாகம் மகா வித்தியாலய அதிபர் கா. நடராசாவும் கருத்துரைகளை ஆற்றவுள்ளனர். (உ)

## தேர்தல் பிரச்சாரங்கள் இன்றுடன் நிறுத்தம்

(சென்னை)

எதிர்வரும் 10 ஆம் திகதி நடை பெறவிருக்கும் தமிழ் நாடு சட்டசபைத்தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் இன்று மாலை 4 மணியுடன் நிறுத்தப்படவேண்டும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் பின்னர், தேர்தல் தொடர்பாக எந்தஊடகத்தின் மூலமும் பிரசாரங்கள் மேற்கொள்ளப் படக் கூடாது எனவும், மீறிப் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவோர்க்கு இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டது

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் நேற்றுக் காலை தனியார் கல்விநிலையமொன்றில் கல்விபயிலும் 50 மாணவர்களின் அடையாளஅட்டைகள் பொலிஸாரால் பறிக்கப்பட்டு பின்னர் நண்பகல் வேளை மாணவர்கள் எச்சரிக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.

சந்திகள் மற்றும் வீதிகளில் ஒன்று கூடி நிற்பதனை மாணவர்கள் தவிர்க்கவேண்டுமென பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (இ-43)

## ஒன்பது தொழிலாளர் மரணம்

பூமிக்கடியில் 110 மீற்றர் ஆழத்தில் சுரங்க வேலைகளில் சுமார் 45 தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த சமயம் மேற்படி விபத்து இடம் பெற்றதாகவும் இவ் விபத்தில் சிக்கியே 9 ஊழியர்கள் இறந்துள்ளதுடன் 10 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### மதரீதியாக மிதவாத போக்கை பின்பற்றும்

# இலங்கை-உலக அரசியல் தலைமைப்பீடங்கள்

இன்று இலங்கை அரசை மட்டுமன்றி உலக அரங்கையே ஆட்டிப்படைக்கும் காரணியாக மதம் விளங்குகின்றது. வளர்ந்து வரும் நாடுகளினைப் பொறுத்த வரையில் அங்குஏலவே ஜனநாயகப் பண்புகள் கேள்விக்குறியாகவுள்ள சமகாலத்தில் ஆட்சிப் பீடத்தினைப் பொறுப்பேற்கும் ''அரசியற் கட்சிகள்', மதசார்புடைய மிதவாதகட்சிகளாக அமையும் போது இலங்கை முதலான குறை அபிவிருத்தி, தென் கிழக்கு ஆசியா நாடுகளில்சமாதானம் இன ஐக்கியம், கூட்டுறவு, சமஉரிமை முதலான ஜனநாயக பண்புகளினை நாம் எதிர் பார்ப்பதுஎன்பதுசற்றுக் கடினமானதாகவேயுள்ளது: இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு மகாசங்கத்தினர் அவ்வப்போது அழுத்தம், எதிர்ப்பு கொடுப்பதுவும், ஆப்கானில் தலிபான் அமைப்பிரைது புத்தர்சிலைஉடைப்பு விவகாரமும் மதவாத அமைப்புக்களினை மிதவாத போக்குடையனவா? என ஐயுற வைப்பதற்கான சிறந்த உதாரணங்களாகக் கொள்ளலாம். இந்நிலை தொடருமானால் தென் கிழக்காசியாவில் ஒற்றுமை – சமாதானம் என்பதனை நோக்காகக் கொண்டு செயற்படும் ''சார்க்'' அமைப்பின் நிலைப்பாட்டை மட்டுமன்றி முழுவுலகையுமே சந்தேகத்திற்குரியதாக்கிவிடும். எனவே இன்று அநேகமானவர்கள் விழிப்படைய வேண்டியது என்பது அவசியமே,

#### மதரீதியாகக் கட்டுப்படல்

ஓர் நாட்டின் அரசியலமைப்பை பொறுத்தவரையில் அரசின் ஆட்சிப் பொறுப்பை தேர்தல் மூலம் கைப்பற்ற வேண்டிய தேவை. போட்டியிடும் அரசியற் கட்சிகளுக்குரிய பாரிய பொறுப்பாகும். குறிப்பாக இச் சமயங்களில் கைகொடுக்கும் அமைப்புக்களாகவே-அமுக்கக் குழுக்கள் எனப்படும் Pressare Groups) அமைப்புக்கள் ஆரம்ப காலத்தில் வளர்முக நாடுகளில் செயற்பட்டன: இவ் அமுக்கக் குழுக்களின் அடியாக பல கட்சிகளும் தோற்றம் பெற்றன: இலங்கையிலும் நிலைமை இவ்வாறே. ஐக்கிய தேசிய கட்சியும் இலங்கை சுதந்திரக் கட்சியும்இவ்வாறே உருவாகின: எனவே இயல்பாகவே நாட்டின் சனத்தொகையில் 75% மாகவுள்ள பௌத்த மதத்தவர்களது நாடாக சுதந்திர இலங்கை கட்டுண்டது. ஆட்சியிலமரும் எக்கட்சியுமே மதரீதியாகக் கட்டுப்பட்டேயாக வேண்டிய இன்றியமையாத கட்டாய நிலை இலங்கை அரசுத் தலைவர்கட்கு உரிய தலையாய பொறுப்பாகும். ஆனால் இந்நிலையில் சமத்துவம், சோசலிஸம் பற்றி நாட்டின் மக்கள் மீது இறைமை மீது பற்று வைத்து அனைவருக்குமான தலைவராக பதவியிலமரும் தலைமைப்பீடம் சிறுபான்மை இனத்தவரையோ அன்றில் அவர்களது மதம் சார் விடயங்களிலோ காலத்துக்குக் காலம் மௌனத்தை அல்லது கண் மூடித்தனத்தையே தமது பதிலாகக் கொண்டுள்ளன எனலாம்.

**ஜெ. தரன்**

இந்நிலையில் உலக அரங்கை சற்று எட்டிப்பார்த்தோமானால் இந்தியாவில் தீவிர இந்துப்போக்குடைய பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சிப் பீடத்தின் பின்பு இந்து முஸ்லிம் பிரச்சினை- ராமர் கோயில்- பாபர் மசூதி விவகாரம் மீளவும் தலைதூக்குமோ என்கின்ற அச்சம் அனேகமான மக்களை தொற்றிக்கொண்டது மறுக்க முடியாத உண்மையே. இவ்வாறான நிலைமைகளின் தொடர்ச்சியாக நாம் முஸ்லிம் கட்சியினரது நிலைப்பாட்டை நோக்குமிடத்து 'புலிகளுக்கும்– அரசுக்கும் பேச்சுவார்த்தை நடைபெறுவதுஎனின் அதில் இஸ்லாமிய மத தலைவர்களும அங்கம் வகிக்க வழியமைக்கப்படல் அவசியம்' என முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது. நிலைமைகள் இப்படியே தொடருமானால்நாட்டின் பிரச்சினையானது தீர்க்கப்படுவதில் மேலும் காலதாமதம் ஏற்படக்கூடும் என்றோஅன்றில். சமாதானம் மலர்வது என்பது இத்தகையதான இக்கட்டான நிபந்தனைகளினால் பின்தள்ளிப் போகுமோ? என்கின்ற ஐயப்பாடே மக்கள் மனங்களில் இயல்பாகவே குடிபுகுந்துவிடுகின்றது:

#### கலாசார அமைச்சின் கீழ் பௌத்தம்

இந்நிலமைகள் தோன்றுவதற்குஆட்சியிலுள்ள அரசும் பலவழிகளில் காரணமாக அமைகின்றது. நாட்டின் விடயங்கள் குறித்து அனைத்து மதத்தலைவர்களுடனும் கலந்து, ஆலோசிதது முடிவெடுக்காமல் பௌத்த மத தலைவர்களுடன் மட்டும் தொடர்புகளை வைத்திருத்தல் அத்துடன் முன்மாதிரியாக கௌரவம் நிறைந்ததாக கொள்ளல். கலாசார அமைச்சின் கீழ் பௌத்த மதத்திற்கு மட்டும் தனியான பிரதி அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கியுள்ளமை, நிதி ஒதுக்கீடுகளில் தீவிர கரிசனை எனப் பலவும் நாட்டினை நாட்டு மக்களினை மத ரீதியாகவும் வேறுபடுத்திக் காட்டும் அரசியற் தலைவர்களினையே எம்மால் இங்குகாண முடிகின்றது.

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலை உடைப்பு விவகாரத்திற்கு எதிராகதுணிந்து குரல் கொடுத்தவகையில் இலங்கை அரசைப் பாராட்டினாலும் 'எவ்விலை கொடுத்தும் அங்குள்ள அரிய சிலைகளினை மீட்க தயார்' என்கின்ற செய்தியானது ஏனைய மதத்தவர்களினை சற்று திகைப்படையச் செய்தது உண்மையே. நாடு, நிதிநிலைமையில் மிகமோசமாக உள்ள நிலையில்இதுவும் அவசியமோ என்று சிந்திக்க வைத்தது. அன்றி இது வெறும் எரிச்சலோ, பொறாமையோ, ஏற்க இயலாத தன்மையோ அல்ல: நாட்டுமக்கள் அனைவரினதும் ஏகப்பிரதிநிதிஎன்ற வகையில் ஜனாதிபதியும், அமைச்சரவையும் பல இடங்களில் மதரீதியாக மிதவாதப் போக்கையே பின்பற்றியுள்ளனர்:

#### புத்திஜீவிகள் ஒதுக்கப்படல்

நாட்டில் கேதீச்சரம, நகுலேச்சரம், மாவிட்டபுரம் முருகன் கோவில் போன்ற இந்துக் கோவில்களுக்கு மக்கள் சென்றுவர படாதபாடுபடும் நிலையில் இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், பள்ளிவாசல்கள் சேதமடைந்து மீளபுதுப்பிக்கசென்றுபார்க்க இயலாமலுள்ள சூழ்நிலையில் உள்ளூர் அமைப்புககள் பலவற்றில் (சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், முஸ்லிம லீக், கிறிஸ்தவ வாலிபர் சங்கம் போன்ற) அரசியல் தெரிந்த புத்திஜீவிகள் பலர் உள்ள நிலையில தேசிய ரீதியாக மட்டுமன்றி மத ரீதியாகவும் ஒதுக்கப்படுவது என்பது ஏற்க இயலாத விடயமாகும். யாகப்பர் தேவாலயம், வண்ணைச் சிவன் கோவில், சென் பீற்றர்ஸ் தேவாலயம் போன்ற ஆலயங்களுக்கு குண்டுகள் போடப்பட்டதனைவிட;வன்மையானதும் கண்டிக்கத்தக்கதுமான செயல்களாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி அடைந்துவருகின்ற - சமாதானம் விரும்பும்- நாடாகக் காணப்படுவதனால் அடிப்படையில் உள்ள இவ்வாறான சிறுசிறு முரண்பாட்டுச் சிக்கல்களுக்கு முடிவுகள் எட்டப்பட்டு இன/மத ஐக்கியம் நிலைநிறுத்தப்படல் அவசியம். இதற்கு அரசு-மக்கள் இரண்டினதும் ஒத்துழைப்பு- பங்களிப்பு-என்பது இன்றியமையாத ஒன்றாகும். மக்கள் எப்பவோ ஒன்றிணைந்து சர்வமதப் பிரார்த்தனைக் கூட்டம் என ஆரம்பித்துவிட அரசு இன்னமும் தொடர்ச்சியாகமௌனம் சாதிக்கின்றது;

#### ஆட்டிப்படைக்கும் காரணிகளில் மதம்

இவ்வாறான ஒரு பின்னணியில் ஆப்கான் விவகாரம்- புத்தர் சிலைகளினை வாங்க புறப்பட்ட விவகாரம்-சரியானதா என்பது சீர்தூக்கிப் பார்க்கப்படல் என்பது அவசியமானதே. ஆனாலும் சர்வதேச உலகிற்கு முன்மாதிரியாக துணிச்சலுடன் கண்டனக் குரல் கொடுத்த இலங்கை அரசு, பகீரதப் பிரயத்தனம் செய்து நிலைமைகளினை அறிந்து உலகுக்கு கொடுத்தவெளியுறவு அமைச்சர்களும் பாராட்டுக்குரியவர்களே எனினும், இவர்களும், ஏனைய மதத்தினர்களுக்காகவும் குரல் கொடுப்பதனைப் பழக்கத்தில் கொளள வேண்டும எனபதுவே மக்கள அனைவரது எதிர்பார்ப்பு எதிர்பார்ப்புக்கள நிறைவேற்றப்படாத பட்சத்தில் இலங்கையை மட்டுமனறி 'தென் கிழக்காசிய நாடுகளினையே ஆட்டிப் படைக்கும் காரணிகளுள ஒன்றாக மதம் விளங்கும என்பதில் ஐயமேதுமில்லை. இநநிலையில சமகாலக்கவிஞன ஒருவன் 'மதம்' பற்றி வருமாறுகூறுகின்றான். மதம்-எனக்கு பிடித்தபோது கோவிலிலிருந்தேன்-பக்தனாய். மதம்-என்னை பிடித்த போது வீதியில் அலைந்தேன் –வெறியனாய். இனி மதம் தொடர்பான முடிவுகள் யாவுமே உங்களிடம்.

## இராசி பலன்

08-05-2001
(சித்திரை 25 செவ்வாய்)
பிரதமை மு இ 7 40 வரை
விசாகம் பி ப 2 25 வரை
இராகுகாலம் 2 55- 4 25
நல்லநேரம் 10 25- 11 55

**மேடம்**
பிரயாண பயம், உஷ்ண வியாதி, காரியத் தடங்கல், எதிர்பாராத பிரச்சினை.

**இடபம்**
வாசன வசதி, கௌரவம், நல்ல உணவு கிடைத்தல், காரியம் கைகூடும்.

**மிதுனம்**
உடல் நலம், சந்தோசம், காரிய நன்மை, பகைவர் விலகுவர்.

**கடகம்**
முயற்சி தாமதம், வியாதி, கௌரவக் குறைவு, எதிர்பாராத நன்மை.

**சிங்கம்**
பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக் குறைவு, காரியதாமதம், விரும்பாத நட்பு,

**கன்னி**
இனிய சம்பவம், வாக்குப் பலிதம். பெரியோர் மனஸ்தாபம், தனவரவு,

**துலாம்**
மாதர் நட்பு, விவாதம், பொருள் விரயம், காரிய தாமதம்,

**விருச்சிகம்**
சயன சுகம், புதியபொருள் சேர்க்கை, கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி.

**தனுசு**
நிலைக கேடு, காரியஅலைச்சல, ரோகம, நித்திரைக் குறைவு;

**மகரம**
காரியம் கைகூடும், தனலாபம், சந்தோசம, கௌரவம,

**கும்பம்**
தொழில நன்மை, முயற்சி கைகூடும, பெரியோர்மதிப்பு, அதிகாரம்.

**மீனம்**
கட்டுப்பாடு, பிரயாணம், முயற்சி தாமதம், மனச் சஞ்சலம.

(பழைய நேரப்படி கணிப்பிடபபட்டது.)

**வளவன்**

---

# மீளக்குடியமர அனுமதி கோரி வெள்ளியன்று அமைதிப்பேரணி?

(மந்திகை).

சாவகச்சேரிப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் இல்லையேல் அப்பகுதியில் உள்ள தமது வீடுகளுக்கு சென்று பொருட்களை மீட்பதற்கு அனுமதி வேண்டும் எனக்கோரி எதிர்வரும் 11ம் திகதி வெள்ளிக்கிழமை அமைதிப் பேரணி ஒன்றை நடத்த சம்பந்தப்பட்ட மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்வமைதிப் பேரணியினர் கோட்டை முனியப்பர் ஆலயத்தில் ஆரம்பித்து றீகல் தியேட்டர், யாழ். பஸ் நிலையம், கஸ்தூரியார் வீதிச் சந்தி என்பவற்றினூடாக ஸ்ரீதர் தியேட்டரை அடைந்து அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் சாவகச்சேரி மக்களை பேரணியில் கலந்து கொள்ளுமாறு பேரணி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்;

இவ் அமைதிப் பேரணிக்கான அனுமதியை பொலிஸாரிடம் கோரியுள்ள போதிலும் அனுமதி இன்னும் கிடைக்கவிலலை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## மயிலிட்டி மாணவர்கள் வலம்புரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி றோமன்கத்தோலிக்க பாடசாலையிலிருந்து நூற்றுக் கணக்கான மாணவர்கள் நேற்றைய தினம் வலம்புரி பத்திரிகைக் காரியாலயத்திற்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்;

அதிபர் செ.அன்ரன் மற்றும் ஆசிரியர்கள் தலைமையில் விஜயம் செய்த மாணவர்கள் பத்திரிகைக் காரியாலயத்தின் செயற்பாடுகள், பணிகள் என்பன குறித்து விரிவாக அறிந்து கொண்டனர்: (உ)

## வெள்ளி விழா

குருத்துவப் பணியில் 25 ஆண்டுகள் நிறைவைக் காணும் அருட்தந்தை எஸ்.பி.மங்களராஜாவின் வெள்ளிவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி பண்டத்தரிப்பில் இடம்பெறவுள்ளது. (உ-5)

## யாழ். பல்கலையில் பயன்மிகு கருத்தரங்கு

### மொழியியல் துறையின் ஏற்பாட்டில்

[யாழ்ப்பாணம்]

'சேகஸ்பியர் படிப்புக்கள்' என்ற தலையங்கத்திலான கருததரங்கு ஒன்றுஎதிர்வரும் 10 ஆம, 11 ஆம திகதிகளில் நடதுவதற்கு யாழ். பல்கலைகழகத்தின் மொழியியல ஆஙகிலத் துறையினர் ஏற்பாடு செய்துளளனா.

அன்று காலை 9.30 க்கு ஆரமபமாகும் மேற்படிகருத்தரங்கில் முதல்நாள நிகழ்வு மொழியியல ஆஙகிலத்துறைத தலைவா திருமதி சாந்தகுமாரி விக்னராஜாவின தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ''The Tragedies of shakes peare ' என்ற தலைப்பில டிசா. பத்மநாதனும் ''sharespeare the Son netcer'' என்ற தலைப்பில ஆங்கில இலக்கிய மூத்த விரிவுரையாளர் திருமதி அமிர்தாஞ்சலி சிவபாலனும் உரையாற்றுவார்கள். அத்துடன் Macbeth என்ற வீடியோ படககாட்சியும் இடம் பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வு 11 ஆம் திகதி காலை 9 30 மணிககு முன்னாள உதவிக் கல்விப்பணிப்பாளர் [ஆங்கிலம்] டி.ஆர்.அருமைநாயகத்தின் தலைமையில இடம பெறும்.

இந்நிகழ்வில் The language of shakespeare என்னும தலைப்பில கலாநிதி ஆர் முருகையனும Shakespearane comedy என்ற தலைப்பில வருகை விரிவுரையாளர் ஈ ஜெயசீலனும உரையாற்றுவார்கள்.

நாடக ஆற்றுகையும் The merchant of Venice' என்ற வீடியோப் படககாட்சியும இடம் பெறும என அறிவிக்கப்பட்டுளளது. (க-9)

# மாவனல்ல சிங்கள- முஸ்லிம் கலவரம்

# அமைச்சர் ஹேரத்திற்கு தொடர்பு இல்லை

(கொழும்பு)

மாவனல்லவில் இடம்பெற்ற சிங்கள-முஸ்லிம இனக் கலவரங்களுக்கும் தனக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை என அமைச்சர் மகிபால ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்; மாவனல்லவில் கலவரம் இடம் பெற்றசமயத்தில்தான் மாலை தீவிற்கு விஜயம்மேற்கொண்டதாகவும் எனவே தனக்கும் இச் சம்பவத்திற்கும் இடையில் எதுவித தொடர்பும் இல்லையெனவும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மாவனல்லவில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் பெரும்பான்மை இனத்தவர் ஈடுபட்டார்கள் என்றும்இவர்கள் அமைச்சரின் ஆதரவாளர்கள் எனப் பரவலாகக்கூறப்பட்டகுற்றச்சாட்டுக்களை மறுக்கும்விதத்திலேயேஅமைச்சரின் மேற்கண்ட கூற்று அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்:

சம்பவம் நடை பெற்ற வேளையில் குறிப்பிட்ட இடத்திற்கு பொலிஸார் எவரும் செல்லவில்லை எனவும் இச் சம்பவத்தின் பின்னணியில் முக்கிய புள்ளிகள்இருந்துள்ளனர் என்பதை வலுப்படுத்துவனவாக இருந்ததால் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (க-2)

## கவிதைநூல் வெளியீடு

சோ: தேவராஜா எழுதிய ஆற்றுக் கவிதைநூல் வெளியீட்டு விழா ஒலிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

தேசிய கலை இலக்கிய பேரவையின் சார்பில் சுகததாஸ விளையாட்டு ஹோட்டலில் இடம்பெற்ற இவ் விழாவில் பல எழுத்தாளர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (து)

## வறிய குடும்பங்களுக்கு மலசலகூட வசதி

(மந்திகை)

வல்வெட்டித்துறை நகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு 40 ஆயிரம் ரூபா செலவில் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென பிரமாண அடிப்படையிலான நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பட்டினிக் கெதிரான நிறுவனமும் இத் திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளது.

இதேவேளை, மேற்படி நகரசபைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வாளி மலசலகூட சேவை, இச்சேவை புரியும் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப் பாட்டு நிலையை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## யாகாரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலில் இன்று மாலை 5.00 மணிக்கு யாகாரம்பம், யாக பூஜையும்,

மறுதினம் சங்காபிஷேகம், விஷேட பூஜை மற்றும் விநாயகர் பெருமை பற்றிய சொற்பொழிவு என்பனவும் இடம் பெறும். (உ)

## ஒய்வு பெறுகிறார்

(மந்திகை)

வல்வெட்டித்துறை நகர சபையின் செயலாளராக கடமையாற்றிய பெரியதப்பி கனகசபாபதி 37 வருட அரச சேவையின் பின் ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு பருத்தித்துறை நகரசபையில் கடமையாற்றியதிருஞான சம்மந்தர் நியமனம் பெற்றுள்ளார் (உ-23)

## படையினரின்வாகனங்கள் பொலிஸ் நிலையத்தில்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினருக்கு சொந்தமான இரண்டு வாகனங்களும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக் கிழமை பண்ணைப் பகுதியில் குருநகரைச் சேர்ந்த செபஸ்தியன் சென்னடி [வயது-34] என்பவர் கடற்படைக்குச் சொந்தமான வாகனத்தில் மோதுண்டு பலியானதும் 'உதயன்' நிறுவன பொது முகாமையாளர் கனகையா நந்தகுமார்[வயது-56] என்பவர் நேற்று முன் தினம் இலுப்பையடிச் சந்தியில் இராணுவ வாகனத்தில் மோதுண்டு பலியானதும் ஏற்கனவே தெரிந்தவையே.

இவை சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களும் விசாரணையின் பின்னர் உரியவர்களிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-10]

## பாதிப்புற்ற மக்களுக்கு உதவு பொருள் வழங்கல்

(ஏழாலை)

மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத்தினூடாக, அமரர் சு ஸ்ரீபாஸ்கரன் ஞாபகார்த்தமாக பாதிப்புற்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலான உதவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வு நாளை மு.ப 10.00 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ-12)

## மட்டு மாவட்டத்தில் அநாதைச் சிறுவர் தொகை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

கடந்தகால போர் அனர்த்தங்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 ஆயிரம் விதவைகள் உருவாகியிருப்பதாகப் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அநாதைச் சிறுவர்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை விதவைகளுக்கான உதவித் திட்டங்கள் பாரபட்சமான முறையிலும் அக்கறையற்ற விதத்திலும் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-து)

## லங்கா சிமெந்து கூ.தாபன ஊழியர்கள் சம்பளம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படாதிருந்த சம்பளத்தின் ஒரு பகுதியை வழங்குவதற்கு நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது

லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன 200 க்கு மேற்பட்ட ஊழியர்களின் தொழிற்சங்க உறுப்பினர்கள் அண்மையில் ஈ.பி.டி.பியின் யாழ் தலைமைச்செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது,

சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களிற்கு கடந்த 6 மாத காலத்திற்கும் மேலாக வழங்கப்படாதுள்ள சம்பளத்தினைப் பெற்றுத்தரும்படி கோரிக்கை விடுத்தனர்.

ஊழியர்கள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதற்கட்டமாக 3 மாத சம்பளத்தினை ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இது ஒருவார காலத்துக்குள் ஊழியர்களுக்கு கிடைக்க ஆவன செய்யபபடும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லங்காசிமெந்துத் தொழிற்சாலை காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாகவும் இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும் எனவும் இச்சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இளைஞன் விடுதலை

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த மூன்று மாத காலமாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய சித்திர வடிவேலாயுதம் இளங்கோ என்ற இளைஞன் நீர் கொழும்பு நீதவானின் உத்தரவின் பேரில் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார். (உ-4)

## பதின்மூன்று சடலங்கள் இனம் காணப்படவில்லை

(கொழும்பு)

கடந்த 4 ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக புலிகளால் கையளிக்கப்பட்ட படையினரின் 29 சடலங்களில் 16 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருனாரட்ண தெரிவித்துள்ளார்.

இனங் காணப்படாத ஏனைய 13 சடலங்கள் அநுராதபுரத்தில் தகனம் செய்யப்பட்டதாகவும் இவை அனைத்தும் அக்கினிச் சுவாலை படை நடவடிக்கையில் பலியான படையினரின் சடலங்கள் என்பதையும் இராணுவப் பேச்சாளர் உறுதி செய்துள்ளார். (உ-5)

## தமிழ் விழா நான்காம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம், கொழும்பு, திருகோணமலை, ஹப்புத்தளை, திருமறைக் கலாமன்ற கலைஞர்களுடன்இணைந்துநடத்திவரும் முத்தமிழ் விழாவின் நான்காம் நாளான இன்று,

கத்தோலிக்க கலை இலக்கியவட்டசெயலாளர்ஜே.சப்பாலா தலைமையில் இலக்கியக் கருத்துரைகள இடம் பெறும.

கலை நிகழ்வாக, செல்வி எஸ் கணேஸ்வரியின் இசைக் கச்சேரியும, செல்வன் ஜி அற்புதராஜா குழுவினர் வழங்கும் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (உ)

## தாதியர் கட்டடத்தை பயன்படுத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் விடுதிக் கட்டடத்தினை மீளவும திருத்திப் பாவிப்பதற்கு படைத்தரப்பினரிடம் இருந்து அனுமதி வழங்கப்பட்டிருப்பதாய் அறிய முடிகிறது

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா படைத்தரப்பினருடன் பேச்சு நடாத்தி தாதியர் விடுதிக் கட்டடத்தை திருத்திப் பாவிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்: போதனா வைத்தியசாலையில பணி புரியும் தாதிமார் சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஈ.பி.டி.பி. யின் யாழ்; தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேச்சு நடாத்தியிருந்தார்கள்.

இச்சந்திப்பின்போது தாதிமார் சங்கத்தினர் படையினர் வசமுள்ள விடுதிக் கட்டடத்தினை திருத்திப் பாவிப்பதற்குப் படையினரிடம் இருந்து பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

குடாநாட்டினை படையினர் கைப்பற்றியது முதல் தமது பாதுகாப்புக் காரணங்களுக்காக தாதியர் விடுதிக் கட்டடத்தினை படையினர் தம் வசப்படுத்தி வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அரை இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் ஆர். ராஜ்குமார் ஞாபகார்த்தச் சுற்றுப்போட்டிக்கான அரை இறுதி ஆட்டங்களில், இன்று பி.ப. 4.00 மணிக்கு யுத்காமல்வி.க. எதிர் யாழ். பல்கலைக்கழக வி.க. (பெண்கள் அணிகள்),

பி.ப. 5.00 மணிக்கு ஜொலிஸ்ரார் வி.க. எதிர் சென்றலைட்ஸ் வி.க. (ஆண்கள்அணிகள்) மோதுகின்றன. (உ)

## படையினரால் உணவு பொதிகள் விநியோகம்

### வெசாக் பண்டிகையை முன்னிட்டு

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம், யாழ். போதனா வைத்தியசாலையில் படையினரால் உணவுப்பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

சுமார் இரண்டாயிரம் வரையிலான மதிய உணவுப் பொதிகள், போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள், அவர்களைப் பார்வையிட வந்தோர் ஊழியர்களுக்கும் படையினரால்விநியோகிக்கப்பட்டமையை அவதானிக்க முடிந்தது. (உ-10)

## யாழ். நகரப் பகுதியில் காவல் கடமையில் கூடுதல் இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

வெசாக் பண்டிகையைமுன்னிட்டு யாழ்.நகரின் பலபகுதிகளிலும் நேற்று வழமையை விடக் கூடுதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்:

நேற்றைய தினம் யாழ். நகரின் வைத்தியசாலைவீதி, கண்டி வீதி, பஸ்நிலையம்வீதி போன்ற பகுதியில் இராணுவத்தினர் முழு உஷார் நிலையில் கடமையில்ஈடுபட்டனர்.

வெசாக் தினக் கொண்டாட்டங்கள் யாழ். நகரில் இராணுவ முகாங்களில் கொண்டாடப்படுவதற்கு பாதுகாப்பு வழங்கும் முகமாகவே இந் நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டதாக பரவலாக கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

## இன்று ஒரு தகவல்

# ஏட்டுச் சுரைக்காயும் இன்றைய பட்டப்படிப்பும்

குறிப்பிட்ட சட்ட திட்டங்களுக்கமைய அந்த வட்டங்களுள் நின்று பட்டங்கள் பெற்றாலும் கூட அவைபதவிக்கும் பதவியுயர்விற்கும் உச்ச வரம்பாக உள்ளமை யதார்த்தத்தின்வெளிப்பாடு. ஆயினும்இப் பட்டங்கள் அன்றாட வாழ்க்கைக்கும்கு தூகலமான குடும்ப வாழ்க்கைக்கும் கட்டியம் கூறும் எனக் கூற முடியாது. பட்டம் தொழிலிற்கும் தனியாள் வேறுபாட்டிற்கும் அலங்கரிப்பாகவும் முடிவைத்தாற் போலவும் இருப்பினும், பட்டங்களை பெறாது அனுபவ மூலம் நிபுணத்துவத்தை அடைந்த சிலர் விஞ்சி நிற்பதும் உண்டு என்பதைச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும். திருமணத்திலும் மதிப்பளிக்க வேண்டும். இப் பட்டங்கள் சில விடயங்களில்தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அதேவேளையில் அருவருப்பையும் ஏற்படுத்துவதுண்டு. எனவே இப்பட்டங்களோடு நுட்பமாகப் பழக வேண்டிய தேவையுமுண்டு என்பதை விளக்க ஒரு கதை.

சட்டத்தரணி ஒருவர் தனக்குப் பொருத்தமான பட்டத்தைப் பெற்ற பெண்ணைத் திருமணம் செய்ய விரும்பினார். ஆயினும் மனையியலில் டிப்புளோமாப்பட்டம் பெற்ற பெண்ணொருத்தியே மனைவியாக இவருக்குக் கிடைத்தாள். திருமணத்தின் பின் இருவரும் தெருவோரமாக அமைந்துள்ள வீட்டில் தனிக் குடித்தனம் நடத்த விரும்பினர். ஒரு நாள் கணவன் மனைவியிடம் மனையியல் முறைப்படி தனக்கு இறைச்சிக்கறி சமைத்துத் தரும்படி ஆவலோடு கூற, மனைவி இதற்குத் தேவையான பொருட்களின் பட்டியலொன்றை கணவனிடம் கொடுக்க அதன்படி தேவையான அனைத்தும் வாங்கி வரப்பட்டன. மனைவி சமையல் தொடங்க முன் திட்டமிட்டு ஒழுங்கு முறைகளைத் தயார் படுத்தி தனதுபுத்தகத்தையும்ஆவணமாகமேசையில் வைத்துக் கொண்டு அதன்படி ஒழுங்காகச் சமையலைத் தொடங்கினாள், கணவன்ஆவலோடு சமையல் முறைகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். கறிஇறக்கும்வேளை நெருங்க மனைவி கறிச்சட்டியைத் தனது படலைக்கு எடுத்து வந்து இறைச்சிக்கறி முதலாம் முறை முதலாம் முறை இரண்டாம் முறை இரண்டாம் முறைஇறைச்சிக் கறி மூன்றாம் முறை எனக் கூறிய பின் அடுக்களைக்கு எடுத்து வந்தாள்.

ஒன்றுமறியாத கணவன் அருகே சென்றுகாரணத்தை வினவ மனைவி புத்தகத்தைக் காட்டி கறிஇறக்கும்முன்ஏலம் போட வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டினாள். ஆச்சரியமடைந்த சட்டத் தரணிக் கணவருக்கே தனது மனைவியின் பட்டம் பற்றியும் தமிழில் ஒரு சொல்லுக்குப் பல கருத்துகள் உள்ளமையாலேயே சட்டத்துறையில் சட்டங்கள் ஆங்கிலத்தில் உள்ளன என்பது பற்றியும் உணர்ந்து கொள்ள நீண்ட நேரம் எடுக்கவில்லை.

இதிலிருந்து பட்டங்கள் மனித வாழ்க்கைக்கு ஒரு எல்லைக் கோடு. அனுபவம்தான் சிறந்த ஆசான். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பதை அறிந்து யதார்த்த உலகில் மகிழ்வோடு வாழ்வோம்.

மு விக்கினேஸ்வரன்
கோப்பாய்

## மாணவரின் வாண்மை விருத்திக்கு உதவும்

# கணிப்பீட்டு முறை ஆசிரியர்களின் சுமையை மேலும் அதிகரிக்கிறதா?

ஆங்கில தினசரியான 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் பிரசுரமாகிய கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கு தொகுத்து தரப்படுகிறது. (ஆ-ர்)

இலங்கை உட்பட பல்வேறு வளர்முக நாடுகளிலும் கண்டிப்பாக அமுல்படுத்தப்பட்டு வரும் மாணவர் தேர்ச்சி தொடர்பான கணிப்பீட்டு முறை தற்போது பெரும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளைவிட எழுத்து வேலைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் மாணவர் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்படுவதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

இந்நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் உள விருத்தி ஆகியவற்றை மேம்படுத்தும்முகமாககணிப்பீட்டு முறை தற்போது இலங்கையின் கல்வி திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இக் கணிப்பீட்டு முறைமை குறித்து பல்வேறு வகையிலும் கருத்தரங்குகள் மற்றும் தொலைத்தொடர்பு ஊடகங்கள் மூலமும் அறிவுறுத்தல்கள காலத்திற்கு காலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவிடயம் தொடர்பான ஒரு சில தகவல்களை இங்கு நோக்குதல் பொருத்தமானதாகும்.

மாணவர்களுக்கு நல்ல அறிவுறுத்தல்களை வழங்குவதற்குஅவர்களின் முன்னேற்றம் அல்லது முன்னேற்றம் இன்மைக்குரிய காரணம் பற்றிய தொடர் தகவல்கள் அவசியமாகும்.

### கற்றல் செயற்பாடு

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின்போது பெறப்படுகின்ற ஒழுங்கான மையப்படுத்தப்பட்ட பின்னூட்டல் தகவல்களிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய இருசாராரும் நன்மை அடைகிறார்கள்.

இந்த வகையில் கல்வியியலில் தீர்மானங்களை எடுப்பதற்கு அது தொடர்பான தகவல்களை சேகரிக்கின்ற நடைமுறையானது கணிப்பீடு எனப்படுகின்றது.

கணிப்பீடானது கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில முக்கியமானதும், பிரிக்க முடியாததுமான ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும். இச் செயற்பாட்டை இலகுவாக்குவதற்கு மாணவர்களின் கற்றல் பற்றிய கீழ்க்காணும் தகவல்கள் பெறப்பட வேண்டும்.

செயற்பாடுகள் முழுவதும் தொடர்ச்சியாக தகவல் சேகரித்தல் திறமையுடன் தொடர்புடைய சகல அம்சங்களும் அதாவது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

### தகவல் சேகரிப்பு

மாணவர்களின் கற்றலில் ஏற்றுக் கொள்ளத்தக்க தகவல்களை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் சேகரிக்கிறார்கள் என்பது தற்போது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இக்காரணங்களை கருத்தில் கொண்டு பாடசாலை மட்டக் கணிப்பீடு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர்களை நிதமும் பரந்தஅளவில் முறைசார்ந்த, முறைசாராக் கணிப்பீட்டு முறைகளால் கணிப்பிட வேண்டும் என்று ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

முறைசாராக் கணிப்பீட்டு முறையானது கீழ் வருவனவற்றை உள்ளடக்கும்.

- ★ மாணவர்களை அவர் தம் செயற்பாட்டில ஈடுபட்டிருக்கின்ற வேளையில் அவதானித்தல்
- ★ மாணவர்களுடன் உரையாடல்
- ★ மாணவர்களின் வீட்டு வேலைகளையும், கொடுக்கப்பட்ட பொறுப்புக்களையும் மீளாய்வு செய்தல.

முறைசார்ந்த கணிப்பீட்டு முறையானது பின் வருவனவற்றை உள்ளடக்கும்.

- ★ குறுகிய கால எழுத்துப் பரீட்சைகள்
- ★ ஆண்டிறுதிப் பரீட்சைகள்
- ★ செயல் முறைப் பரீட்சைகள்
- ★ ஒழுங்காக புள்ளியிடப்பட்ட செயற்திட்டங்கள்.
- ★ ஒப்படைகள்.
- ★ கட்டுரைகள்.

மேற்குறிப்பிட்டபணிகளை செய்வதற்கும் கணிப்பீடுப் பதிவுகளை பராமரிப்பதற்கும் ஆசிரியர்கள் ஒழுங்காக பயிற்றப்பட்டுள்ளார்கள்.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்து அவற்றை பல தேவைகளிற்குப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக,

- ★ மாணவர்களுக்கு அவர்களது முன்னேற்றம், பலம், பலவீனம் தப்பபிப்பிராயங்கள் பற்றிய பின்னூட்டல்களை வழங்குவதற்கு.
- ★ மாணவர்கள் கற்பதற்கு ஊக்குவிக்க.
- ★ மாணவர்களின் முன்னேற்றம் பற்றி அவர்களது பெற்றோர்களுக்கு தெரிவிக்க
- ★ கற்றலின்போது பெறப்படுகின்ற இடர்பாடுகளுக்கு பரிகார நடவடிக்கைகளுக்கு திட்டமிட.
- ★ ஆசிரியர்கள் தங்களது [illegible] முறை ஏதாவது குறைபாடு அல்லது [illegible] பட்டால் அவற்றைத் திருத்த.

[illegible] சுருக்கமாக நோக்கின் ஆரம்ப பாடத்திட்டத்தில் (தரம் 1-5) கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் முறைசாரா முறைக்கு அழுத்தம் கொடுத்து தொடர் கணிப்பீடு செய்யப்படுகிறது.

ஆசிரியர்கள் [illegible] தயாரித்த [illegible] ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

ஆரம்ப பிரிவில் [illegible] முக்கியத்துவம் [illegible] கணிப்பீடு செய்யப்படுகிறது.

இது மாணவர்களின் அடைவை கணிப்பீடு செய்யவும், சரியான வழிமுறையை மேற்கொள்ளப்படுகிறது.

கனிஷ்ட இடைநிலைகளில் (தரம் 6-9) பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தில் [illegible] அனைத்துப் பாடங்களும் கணிப்பீடு செய்யப்படும்.

9 ம் தர இறுதியில் மாகாண மட்டத்தில் ஒரு தகுதிகாண் பரீட்சை நடத்தப்பட்டு தோற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இச் சான்றிதழில் ஒவ்வொரு பாடத்திற்கும் மாணவர் பெற்ற தரமும், மேலதிகமாக பாடசாலை மட்டத் தரமும் குறிக்கப்படும்.

2002 ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த.(சா/த) சான்றிதழ்களில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தரமும் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. க.பொ.த உயர்தரத்தில் கீழ் வருவன கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

- ★ அனைத்துப் பாடங்களும் செயற்றிட்டங்கள்.
- ★ இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல், விவசாயம், மனைப்பொருளியல் ஆகிய

(2ம் பக்கம் பார்க்க)

**கலாநிதி சேனரத் நாணயக்கார**
மேலதிக செயலாளர்
கல்விதர அபிவிருத்தி,
கல்வி அமைச்சு.

**தமிழாக்கம் வித்தகன்**

## குடாநாட்டில்

# காணாமற் போவோர் பற்றிய முறைப்பாடு இவ்வருடம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் குறுகிய காலத்தில் 15 இற்கும் அதிகமானவை பதிவாகியிருப்பதாக யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சித்திரை வருடப்பிறப்பில் இருந்து இற்றை வரையான ஒரு மாதத்திற்குள் லேயே மேற்படி தொகையினர்காணாமற்போயிருப்பதாகவும், 1996,1997 காலப்பகுதிகளின் ன் குறுகிய காலத்தில் இவ்வளவு தொகையினர் காணாமற் போயிருப்பது இத் தடவையெனவும் மேலும் அறிய முடிகிறது.

காணாமற் போயுள்ளவர்களில் யா/மத்திய கல்லூரி, யா/வைத்தீஸ்வரா கல்லூரி, பருத்தித்துறை திருஇருதயக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதைவிட, காணாமற் போனவர்கள் தொடர்பாக படை அதிகாரிகளுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தொடர்பு கொண்ட போதிலும் அவர்கள் பற்றிய தகவல்களை அறிய முடியவில்லை என கூறப்படுகிறது. (உ-10)

## புத்தரின் வழியை பின்பற்றினால்

# மனித உரிமைகள் பற்றி அலட்டத் தேவையில்லை

(கொழும்பு)

புத்த பெருமான் காட்டிய அன்பு, கருணை, நேசம் ஆகிய வழிகளைக் கடைப்பிடித்தால், மனித உரிமைகளைப் பாதுகாக்கச்சட்டங்கள் இயற்றும்தேவையிராது.

இவ்வாறு, வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஐக்கியமும் அமைதியும் நிறைந்த இலங்கையைக் கட்டியெழுப்ப இன்றைய தினத்தில் மக்கள் பிரார்த்திக்க வேண்டும் என்று மேலும் ஜனாதிபதி கேட்டுள்ளார். [உ]

## யாழ். பல்கலையில்

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''மழைவீழ்ச்சி எதிர்வு கூறுதலிற்கான மாதிரி அணுகுமுறை'' என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு இம் மாதம் 9 ம் திகதியாழ். பல்கலைக்கழகத்தில் பி.ப 3.00 மணியளவில்இடம்பெறவுள்ளது.

பல்கலைக் கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக விவசாய பீட மாணவன் ரி. மிகுந்தன் உரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக் கழக புவியியல் துறையினரின் ஏற்பாட்டில் மேற்படி கருத்தரங்கு இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-06)

# புத்தளம் விவசாயிகள் மழையினால் பாதிப்பு

(புத்தளம்)

அண்மையில் பெய்த தொடர் மழையினால் புத்தளம் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த பயிர் வகைகள் பலவும் மழையினால் அழிந்து நாசமாகியுள்ளன.

புத்தளத்தில், வட பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வசிப்பவர்களே விவசாய முயற்சியில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-து)

## சோனியா காந்தி தமிழகம் வராமைக்கு ஜெயாவே காரணம்

(சென்னை)

தமிழக சட்ட சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் சோனியா காந்தி கலந்துகொள்ளாததற்கு செல்வி ஜெயலலிதா மீது கொண்ட நம்பிக்கையின்மையே காரணம் என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

பொதுவாக தேர்தல் நடக்கும் மற்றைய மாநிலங்களுக்கு சோனியா காந்தி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து உரையாற்றி வருகின்றார்.

ஆனால் தமிழ் நாட்டு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ள இற்றைவரை வரவில்லை.

இதற்கு செல்வி ஜெயலலிதாவிற்கும் சோனியா காந்திக்கும் மனக் கசப்பு இருந்து வருவதே காரணம் என மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் ரெங்கையா நாயுடு தெரிவித்தார்.

நேற்று நாகர் கோயில் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய அவர் ஜெயலலிதாவின் தேர்தல் மனு தள்ளுபடி செய்யப்பட்டும் மக்களிடையே எந்த தவிப்புஉணர்வலையும் ஏற்படவில்லை என்றும் ஜெயலலிதா கூட்டணிக்குள் பிளவுகள் ஏற்பட்டிருப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். [து]

## மத்திய கிழக்கில் சமாதானம் மலர அரபாத் பாடுபடுவார்

(பிரிட்டோரியா)

மத்தியகிழக்கில் சமாதானம் ஏற்படுவதற்கு அயராது பாடுபடப்போவதாக பலஸ்தீன அதிபர் ஜஸீர் அரபாத் கூறியுள்ளார்.

காஸாப் பகுதிகளில்ஆயுதம் தரியாத சர்வதேசகண்காணிப்பு படையொன்றை நிலைகொள்ளச் செய்வதற்கு அணிசேரா நாடுகளின் அமையம் ஆதரவளிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்முறைகளினால் இஸ்ரேலியர்களினதும் பலஸ்தீனர்களினதும் கொள்கைகளை திருப்திசெய்துவிட முடியாது என்றும்சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எகிப்து, ஜோர்டான் ஆகிய நாடுகள் முன்வைத்த தீர்வு யோசனைகளை ஏற்றுக்கொள்வதாகவும் அரபாத் மீள வலியுறுத்தியுள்ளார்

மத்திய கிழக்கில் நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளதால் இரக்தம் சிந்தப்படுவதை தவிர்ப்பதற்காக சமாதான முயற்சிகள் துரித்மாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்கஜனாதிபதி தெரிவித்துள்ளார். (உ-3)

## கலக நிலைப் பிரகடனம் உத்தியோக பூர்வ நீக்கம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரகடனப்படுத்தப்பட்ட கலக நிலைப் பிரகடனத்தை பிலிப்பைன்ஸ் அதிபர் அரோயா உத்தியோக பூர்வமாக நீக்கியுள்ளார்.

அரோயாவின் அரசிற்கு எதிராக சதிப்புரட்சி ஒன்று மேற் கொள்ளப் படவிருக்கிறது எனக் கிடைத்த தகவலை அடுத்தும் முன்னாள் அதிபர் எஸ்ராடாவின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் அதிபரின்மாளிகையைஉடைத்துக் கொண்டு நுழைய முயன்றதையடுத்தும் மேற்படி கலகநிலைப் பிரகடனம் பிலிப்பைன்ஸில் அமுலுக்கு கொண்டுவரப் பட்டிருந்தது. (உ-9)

## விளையாட்டரங்கின் சுவர் இடிந்து வீழ்ந்தது பலர் மரணம்

(தெஹ்ரான்)

ஈரானின் வடகிழக்குப் பகுதியில் கால்ப்பந்தாட்ட அரங்கொன்றில் பார்வையாளர்கள் அமரும் இடத்தில் உள்ள சுவர் இடிந்து விழ்ந்ததால் பலர் உயிரிழந்துள்ளனர்.

கப்சியன் கரையோரமாக உள்ள சாரி என்ற நகரில் இரண்டு ஈரானிய அணிகளுக்கிடையிலான கால்ப்பந்தாட்டப் போட்டி ஒன்றின் போதே மேற்படி விபத்து இடம் பெற்றதாக அறிய முடிகிறது.

மேற்படி அரங்கில் 20 ஆயிரம் இரசிகர்களுக்கு மேல் இக் கால்பபந்தாட்டத்தைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தனர் என்பது இங்கு குறிபபிடத்தக்கது. (உ-9)

## வன்முறைதலைவிரித்தாடும் அஸாம் மாநிலம்

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியான அஸாம் மாநிலத்தில நான்கு கெரில்லாப் போராளிகளை இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சட்ட விரோதமாக இயங்கி வந்த அஸாம் ஐக்கிய முன்னணி அமைப்பைச் சேர்ந்த போராளிகளே கொல்லப்பட்டவர்கள் ஆவார்.

மேற்படி கிளர்ச்சிக்காரர்கள் மறைந்திருந்த வீடு ஒன்றையும் படையினர் சுற்றிவளைத்ததை அடுத்து இருதரப்பிற்கும் இடையில் மோதல் வெடித்ததாகவும் மேற்படி மோதலிலேயே இந் நான்குபோராளிகளும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அஸாம்மாநிலத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள மாநிலசட்ட தேர்தலுக்கு முன்னாக நிகழ்ந்த வன்முறைகளில் இதுவரை 40 க்கும் அதிகமானோர் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## உலகிலேயே மிகப்பெரும் புத்தர் சிலை இந்தியாவில் நிறுவப்படுகிறது

(புதுடில்லி)

உலகிலேயே மிகப்பெரிய புத்தர்சிலை இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

20 கோடி அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்படும் இப் புத்தர்சிலை ஆயிரம் வருடங்கள் நிலைத்து நிற்க வல்லது எனவும், 5 வருடங்களில் இது நிறுவும்பணி முடிந்துவிடும் எனவும் நம்பப் படுகிறது.

மேற்படி புத்தர் சிலை அமைப்புக்கு திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவின் அனுசரணையும் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த மார்ச்மாதம் ஆப்கானிஸ்தானில் பழமைவாய்ந்த புத்தர் சிலைகள் அழிக்கப்பட்டமையை யடுத்தே இச்சிலை நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாய் கூறப்படுகிறது. (உ)

## பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

(லண்டன்)

எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் கொமன் வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூடிப் பேசுவதற்கு முன்பாகபாகிஸ்தான் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த விட்டால் கொமன் வெல்த் அமைப்பில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்படும் என்று கொமன் வெல்த் வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தற்போது கொமன் வெல்த் அமைப்பில் இருந்து பாகிஸ்தான் தற்காலிகமாக நீக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப் பிடத்தக்கது (உ-9)

**உலக தரிசன அறிவுப் போட்டி**

இலக்கம் 10 திற்கான வினாக்கள் 10-05-2001 அன்று வெளிவர இருக்கின்றன.

## உலக தரிசனம்

### இந்திய விமானம் வீழ்ந்து நொருங்கியது

(புதுடில்லி)

இந்தியாவின் யுத்தவிமானமொன்று வீழ்ந்து நொருங்கியதில்விமானிமரணமானார்.

பாகிஸ்தான் எல்லையில் இந்திய விமானப்படை யுத்தப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டது.

நூறு யுத்தமிக் விமானங்களும் ஐம்பதினாயிரம் படையினரும் கலந்து கொண்டுள்ள இராணுவப் பயிற்சியில் மேற்கண்ட சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (து)

## ஜெயலலிதா முதல்வராக வருவதை தடுக்கமுடியாது

(சென்னை)

அண்ணாதி.மு.க.பொதுச் செயலர் ஜெயலலிதாவின் வேட்புமனுக்கள் நான்கையும் நிராகரித்தமை சட்டத்துக்கு முரணான செயல் என்றுமுன்னாள் அமைச்சர் அரங்கநாயகம் தெரிவித்தார்.

செய்தியாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில்தமிழகச் சட்ட சபைத் தேர்தலில்அ இ அ.தி மு க வெற்றி பெற்றால் யாரும் ஜெயலலிதா முதல்வராவதைத் தடுக்க முடியாது,

தேர்தல் சட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்டவர் மாநில ஆளுநர் என்றும் அவரின் விருப்பின்படி கூடுதல் போட்டியாளர்கள் வெற்றி பெற்ற கட்சித்தலைவர்முதல்வராக முடியுமென்றும் முன்னாள் அமைச்சர் அரங்க நாயகம் தெரிவித்தார்.

இதற்கிடையில் புதுவை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அண்ணாதி.மு.கவெற்றி பெறுமென்றும் அப்பொழுது சட்டம் ஒழுங்கினை நல்ல முறையில் நீதிபானமுறையில் தமிழக அரசு கடைப் பிடிக்குமென்றும் கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார். (து)

### சுரங்க விபத்து 9 பேர் மரணம்

(லண்டன்)

உக்ரைனில் உள்ள சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வாயுக் கசிவு காரணமாக ஒன்பது சுரங்கத் தொழிலாளர்கள் இறந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. [உ-9]

## தீவிரவாதிகள் திட்டம் பொலிஸாரால் முறியடிப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் உள்ள மாநில தலைமைச் செயலகத்திற்கும் பள்ளிக்கூடக் கட்டடம் ஒன்றை குண்டு வைத்துத் தகர்க்கும் தீவிர வாதிகளின் திட்டம் இந்தியப் பொலிஸாரால் நேற்று முன்தினம் முறியடிக்கப் பட்டுள்ளது.

மாநில தலைமைச் செயலக கட்டடம் மற்றும் தனியார் பள்ளிக் கூடம் ஒன்றின் அருகேயும் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளைத் தாம் அகற்றியுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக 9 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## செய்திப்பரல்

★ அஸாமில் பொலிஸாருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒரிஸா தீவிர வாதி ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன், இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

★ நேற்று முன்தினம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசியக் கோப்பை பட மிண்டன் போட்டியில் தென்கொரியாவை சீனா தோற்கடித்துள்ளது.

★ நாட்டின் பாதுகாப்பினை எந்த விதத்திலும் தாம் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

★ பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதிக்குள் இஸ்ரேலியத் துருப்புக்கள் மீண்டும் நுழைந்துள்ளன. (உ-9)

## ஊழலை வெளிக்கொணர்ந்த பத்திரிகையாளரைக் கொல்ல முயற்சி

(புதுடில்லி)

இந்தியாவில் அண்மையில் பரபரப்பாகப் பேசப்பட்ட இராணுவ பேர ஊழல் விவகாரத்தை அம்பலமாக்கிய செய்தியாளர் ஒருவரைக் கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச்செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய உயர்மட்டத்தில் இடம்பெற்ற ஊழல் விவகாரங்களை இரகசியமான முறையில் படம்பிடித்து இனரநெட் இணையத்தளத்தில் வெளியிட்டு வைத்த டெகல்காடொட்கொம் என்ற செய்தி அமைப்பின் ஆசிரியர் வருட் ஜெஸ்மன் என்பவரையே கொலை செய்ய முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி கொலை முயற்சியை தாம் முறியடித்து விட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-9)

## விண்வெளி சுற்றுப்பயணி பூமிக்குத் திரும்பினார்

(லண்டன்)

விண்வெளிக்குச் சுற்றுலாப் பயணியாகச் சென்ற முதலாவது நபரான அமெரிக்கவணிகர் டெனிஸ்பிற்ரோ அனைத்துலக விண்வெளி நிலையத்தில் ஒருவார காலத்தைக் கழித்துவிட்டு கஸகஸ்த்தான் பாலைவனத்தில் பாதுகாப்பாகத்தரையிறங்கியுள்ளார்.

அறுபது வயதான டெனிஸ் பிற்ரோ விண்வெளிக்கு உல்லாசப்பிரயாணம் மேற்கொள்வதற்காக20மில்லியன் அமெரிக்க டொலர் கொடுத்தார் என்பது தெரிந்ததே.

தனது விண்வெளி உல்லாசப் பிரயாணம்சொர்க்கம் போன்று இருந்தது என்று அவர் தனது பயணத்தினை வர்ணித்துள்ளார். (உ-9)

நாடொறும் நாடி முறை
செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்;
- குறள் -

## வலம்புரி

### மனித நேயம் இருந்தால்---

யுத்தம் சூழ்ந்துள்ள வடபுலம் மரணங்கள் மலிந்த பூமியாகி விட்டது. எந்த வடிவில் மரணங்கள் சூழ்ந்து கொள்ளுமென்று சொல்லமுடியாதவகையில் தமிழர்களின் வாழ்க்கை அமைந்து விட்டது.

துப்பாக்கிச்சூடு, ஷெல் வீச்சு என மரணங்களுக்கு வகை கூறிய நிலையுடன் படையினரின் வாகனங்களும் பலருக்கு மரணச் சான்றிதழை வழங்கியுள்ளது. பொதுமக்கள்நடமாடும் வீதிகளில் படையினரின்வாகனங்கள்அதிவேகத்துடன் ஓடுவதால் தவிர்க்கப்படக் கூடிய மரணங்கள் நடந்து விடுகிறது.

யுத்த முனைகளில் செலுத்தப்பட வேண்டிய வேகத்தில்வாகனங்களைப் பொது மக்கள் நடமாடும் வீதிகளில் ஓடினால், மரணங்களே நடக்குமென்பது எவரும்புரியாமலிருக்கமுடியாது.

ஆனால் கடந்த வாரத்தில் மட்டும் படையினரின் வாகனங்கள் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இத்தகைய உயிரிழப்புக்கள்தொடர்வதைத்தடுக்க வேண்டுமாயின் இராணுவ வாகனங்களை ஓடும்சாரதிகள் மனித நேயம் மிக்கவர்களாக இருப்பது அவசியமாகும். எமது நாடு, எமது இனம்,எமதுமொழி, எமது ஆட்சிஎன்ற சர்வாதிகாரச் சிந்தனை இராணுவசாரதிகளிடம்இருக்குமாயின் விளைவு அப்பாவித் தமிழ் மக்களின் மரணங்களே யாம்.

ஒவ்வொரு மரணத்தின் முடிவிலும் இருக்கும் சோகங்களை,சுமைகளை, குடும்பநிலைகளைபடைத் தளபதிகள் கொஞ்சமேனும் உணர்ந்திருந்தால், இராணுவ வாகனங்களால் ஏற்படும் மரணங்கள் தடுக்கப்பட்டிருக்கும்.

வீதிக்கு வீதி, மூலைக்கு மூலை காவலரண்களில் இருந்து அக்குவேறு ஆணிவேறாகச் சோதனைநடத்தும் இராணுவத்தினரும். பொலிஸாரும் பொது மக்களின் நன்மையைக் கருதுவார்களாயின், போக்குவரத்திற்கு உதவியாகச் செயற்பட முடியும்.

கோலவுடை தரித்து ஆயுதம் ஏந்தி நிற்பது புலிகளை இனங்காண்பதற்கு மட்டும் தான்என்றமனோநிலையைத் தவிர்த்து பொதுமக்கள், பாதசாரிகள் போன்றோரைக் காப்பாற்றுவதும், கடமை என்பதை இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து படைத்தரப்பு உணர்வது மிகமிக அவசியமாகும்.

# காற்றுடன் கலந்து பரவும் காச நோயினைக் கண் காணித்துக் கட்டுப்படுத்தல் வேண்டும்

1882 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி றொபர்ட் கொக் (ROBERT KOCH) என்னும் விஞ்ஞான மேதை காசநோயை உண்டாக்கும் மைக்கோபக்ரீறியம் ரியூபகுளோசிஸ் கிருமியைக் கண்டுபிடித்தார். மருத்துவத்தில் கொக் நோய் என்றால் காசநோயை குறிக்கும். வளரும் நாடுகளில் காசநோய் சம்பந்தமான தடுப்பு நடவடிக்கைகளில் விசேஷ கவனம் எடுக்க வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

### இலங்கையில் காசநோய்

1999 ஆம் ஆண்டு இலங்கையில் 7157 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளார்கள். அதில் 5900 (82.4%) நோயாளருக்கு நுரையீரல் காசநோய் என்றும் இதில் 3911 (66.3%) நோயாளருக்கு சளியில் காசநோய் கிருமி இருப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 1257 [17.6%] நோயாளர்களுக்கு வேறு உறுப்புகளில் காசநோய் தாக்கம் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக:— நிணநீர்க் கணுக்கள், எலும்புகள் சிறுநீரகம் ஆகியவை.

2000ஆண்டில் யாழ்ப்பாண மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் 215 காச நோயாளர்கள் இனம் காணப்பட்டார்கள். இதில் 100 நோயாளருக்கு சளி பரிசோதனையில் காசநோய் கிருமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எக்ஸ்ரே கருவியினால் நெஞ்சப் படம் எடுத்து காசநோய் இருப்பதாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வகையான நுரையீரல் காசநோயாளர்களால் தான் இந்நோய் மற்றவர்களுக்கு பரப்பப்படுகிறது. ஆகையினால் இவர்களை வைத்தியசாலையில் உடனடியாக அனுமதித்து தகுந்த சிகிச்சை அளித்து முற்றாக குணப்படுத்தப்படுகிறது.

### நோயின் அறிகுறிகள்

காசநோய் கிருமி நுரையீரலையே 80 சதவிகிதம் தாக்குகிறது இந்நோயின் அறிகுறிகளைசகலரும் அறிந்திருப்பது அவசியமாகும். அவையாவன

★ இரண்டு அல்லது மூன்று கிழமைக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இருமல்.
★ இருமும்பொழுது சளியுடன் இரத்தம் வருதல் அல்லது தனி இரத்தம் மட்டும் வருதல்.
★ நெஞ்சு நோ
★ காய்ச்சல்
★ பசியின்மை
★ மெலிந்து நிறைகுறைதல்
★ களைப்பு போன்றவை

நுரையீரல் தவிர்ந்த வேறு உறுப்புகளில் வரும் காசநோய் தாக்கப்பட்ட உறுப்புகளை பொறுத்து அறிகுறிகள் வேறுபடும். உதாரணமாக நிண நீர் கணுக்களில் இந் நோய்யுள்ளவர்களுக்கு கழுத்திலுள்ள நிண நீர் கணுக்கள் வீங்கிக் காணப்படும்.

## மருத்துவ விளக்கம்

### காற்றுடன் கலந்து பரவல்

நுரையீரல் காசநோய் உள்ள ஒருவரின் மூலமாகத் தான் இந் நோய் மற்றவர்களுக்குப் பரவ ஏதுவாக இருக்கிறது. இந்நோய் உள்ள ஒருவர் இருமும்பொழுது வெளிவிடும் காசநோய் கிருமிகள் காற்றுடன் கலந்து, அக் காற்றை சுவாசிக்கும் மற்றவர்களுக்கும் தொற்றிவிடுகிறது. அதனால் இந்நோய் உள்ளவர்கள் இருமும் பொழுது ஒரு துணியால் வாயை இறுக மூடுவது பாதுகாப்பானது. அத்துடன் காசநோயுள்ளவர்கள் சளியை எல்லா இடங்களிலும் துப்பாமல்,கிருமிநாசினி போட்ட பாத்திரத்தில் துப்பி மூடி வைத்து பின் எரித்து விட வேண்டும்.

சூரிய வெளிச்சம் காசநோய் கிருமியை அழித்துவிடும். இருட்டான ஈரலிப்பான நிலத்தில் கிருமிகள் பல நாட்களுக்கு அழியாமல் இருக்கும். எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களையே இந்நோய் விரைவாக தாக்குகிறது. உதாரணமாக போஷாக்கு குறைந்தவர்கள் சலரோக நோயாளர்கள், எய்ட்ஸ் நோயாளர்கள் மற்றும் ஸ்ரிரோயிட்ஸ் மருந்து பாவிப்போர்.

### சளி பரிசோதனை

காச நோயைக்கண்டு பிடிப்பதற்கு சளிப் பரிசோதனை தான் மிகவும் சிறந்தது. அத்துடன் நம்பிக்கையானதும் இரண்டு கிழமைக்கு மேலாக இருமல் உள்ளவர்கள் காலையில் எழுந்து நன்றாக இருமி நுரையீரலில் இருந்து வரும் கட்டிசளியை ஒரு போத்தலில் எடுத்துபரிசோதனைக்கு கொண்டு வரவேண்டும். வெறும் எச்சிலை கொண்டு வராமல் நெஞ்சில் இருந்து வரும்கட்டிசளியைக்கொண்டு வந்தால் முதல் பரிசோதனையிலே காசநோய் கிருமியை இலகுவாககண்டுபிடிக்க முடியும். சளியை இவ்வாறுமூன்று தடவைகள் பரிசோதிக்க வேண்டும். இதில் நோயாளர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

இனம் காணப்பட்ட எல்லா நோயாளர்களும், சளியில் கிருமி உள்ளவர்கள் ஆஸ்பத்திரியில் இரண்டு மாதம் தங்கியிருந்து மருந்து எடுப்பது மிக அவசியம். ஒவ்வொரு நோயாளியும் மருந்து உட்கொள்வதை நேரடியாக

பி. புவனேஸ்வரன்
வைத்திய அதிகாரி
மார்புநோய் சிகிச்சை நிலையம்
யாழ்ப்பாணம்

கண்காணிக்க வேண்டும் இந்த இரண்டு மாதங்களில் நோயாளர்களில் நல்ல முன்னேற்றம் காணப்படும். அத்துடன் இரண்டு கிழமைகளில் இந்த நோய்பிறருக்கு தொற்றும் சக்தியும்அற்றுப்போகும். பின் 4மாதங்கள் வீட்டில் இருந்து மருந்து எடுக்கலாம். நோயாளி கவனமாக ஒவ்வொருநாளும் மருந்து உட்கொள்கின்றாரா? என்பதை வீட்டில் உள்ள ஒருவர் பொறுப்பேற்று செய்யவேண்டும். கர்ப்பிணித் தாய்மார் [illegible] தால் இதே மருந்துகளை எடுக்க வேண்டும் இதனால் குழந்தைக்குத் தாக்கம் ஏற்படாது.

### நேரடிக் கண்காணிப்பு

பங்களாதேஷில் நேரடிக் கண்காணிப்பு சிகிச்சைமுறை (DOTS DIRECTIY OBSERVED THERAPY SHORT COURSE நல்லபலனைக் கொடுத்து இருக்கிறது இலங்கையிலும் கொழும்பில் 1997ம் ஆண்டு நேரடி கண்காணிப்பு சிகிச்சை தொடங்கப்பட்டது இதை மற்றைய மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தல் நன்மை பயக்கும்

கிரமமாக குறிப்பிட்ட கால எல்லைக்கு மருந்து எடுக்காமல் அசிரத்தையாக விட்டு விட்டு ஒழுங்கற்ற முறையில் எடுக்கும் நோயாளர்களுக்கு மருந்துக்கு கட்டுப்படாத காசநோய் உருவாக இடமளிக்கிறது (MOLTI-DRUG RESISTANCE இப்படியான நிலைமை உருவாகாமல் ஒவ்வொருவரும் உணர்ந்து ஒழுங்காக மருந்து எடுக்க வேண்டும்.

பிறந்த குழந்தைகளுக்கு பி சி ஜி மருந்து ஏற்றுவதினால் 14 வயதுக்கு உட்பட்டோருக்கு காசநோய் வருவது வெகுவாக குறைந்து இருக்கிறது பி சி ஜி போட்டும் இடது கையில் தழும்பு இல்லாவிட்டால் வைத்தியரை அணுகி ஆலோசனை பெறவும்.

எங்கள் நாட்டில் இருக்கும் இலவச வைத்திய சேவையை பயன்படுத்திப் பிரதேசமக்கள் மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக அருகிலுள்ள மருத்துவ மனைக்கு சென்று வைத்திய ஆலோசனை பெறவும். எல்லாரும் பொறுப்புணர்வுடன் ஒத்துழைத்தால் இந் நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

# ஒழுங்கான சிறுவர் சமுதாயத்தை உருவாக்குவது பெற்றோர் கடமை

### சிறுவர் இல்ல திறப்பு விழாவில் நீதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றங்களிற்கு வரும் வழக்குகளில் அனேகமானவை சிறுவர்களுடன் சம்பந்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. ஒழுங்கான, கட்டுப்பாடான சிறுவர் சமுதாயத்தை உருவாக்குவது பெற்றோரின் தலையாய பணியாகும்.

கோண்டாவில் பொற்பதி வீதியில் நேற்றுக் காலை 10 30மணியளவில் 'தாயகம்' சிறுவர் பராமரிப்பு இல்லம் திறந்துவைக்கப்பட்ட போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட நீதிவான் இ.த: விக்னராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்;

ஒய்வு பெற்ற நீதிபதியும் யாழ்; பதில் நீதவானுமாகிய மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; தொடரும் யுத்தத்தால் பெற்றோரை இழந்த சிறார்களையும், கணவனை இழந்த விதவைகளையுமே தினசரி காண வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஆதரவற்ற இளம் பிஞ்சுகளுக்கு உதவிக்கரம் நீட்டுவது பெரும் பணியாகும்;

சைவ சிறார்கள் வேற்று மதத்தவரால் கவரப்படாது தமது சமயத்தை தொடர்ந்து பின்பற்ற தூண்டும் ஒரு பணியாகவும் இவ் இல்லத்தின் செயற்பாடு அமைந்துள்ளது.

நீதிமன்றங்களில் தண்டப் பணமாக அறவீடு செய்யப்படும் பெரும் தொகை பணங்களை இவ்வாறான பராமரிப்பு இல்லங்களுக்கு நாம் வழங்கி வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள, மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம், மல்லாகம் பதில் நீதிவான் க அரியநாயகம், யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், மேலதிக மாவட்டப் பதிவாளர் நா. சதாசிவ ஐயர், யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத்தலைவர் க. தேவராஜா உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

30 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்நிலையத்தில் நேற்றைய தினம் சேர்க்கப் பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது. (க-6)

## சம்பியனாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 3 ஆம் திகதி யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய 17 வயதுப் பிரிவு அணி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியினரை வென்று யாழ் மாவட்டசமியியனாகி வடக்கு கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (உ)

## பருத்தித்துறையில் கண்ணி வெடி

[கொழும்பு]

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கண்ணி வெடி வெடித்ததால் ஒரு படை வீரர் காயமடைந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலைய விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-09[

## வெசாக் படுகொலைகளை நினைவு கூர்ந்து

# மட்டுமாவட்டத்தில் பூரணஹர்த்தால்

# ராணுவம் குவிப்பு - நகர் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

கடந்தவருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெசாக் தினத்தன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவங்களை நினைவுகூர்ந்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வருடம் மே மாதம் 17ம் திகதி வெசாக்தினத்தன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 17 பொதுமக்கள் உயிரிழந்தும் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்திருந்தமை தெரிந்ததே.

இக்குண்டு வெடிப்புச்சம்பவத்தை நினைவு கூர்ந்தே நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலுக்கு கிழக்கிலங்கை பல்கலைக்கழக சமூகமும், மற்றும் பல்வேறு சமூகஅமைப்புக்களும்வேண்டுகோள் விடுத்திருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட பூரணஹர்த்தாலை அடுத்து கடைகள அனைத்தும் மூடப்பட்டும், வாகனங்கள் பொதுமக்கள் நடமாட்டமின்றி வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. மட்டக்களப்புப்பொதுச் சந்தை மூடப்பட்டிருந்தது டன் அஸ்ரன் பஸ்கம்பனி தனது சகல போக்குவரத்துச்சேவைகளையும் நிறுத்தியிருந்தது.

இந்த ஹர்த்தாலை அடுத்து மட்டக்களப்பு நகரில் உள்ள வீதிகள் தோறும் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினர் பூட்டிய கடைகளை திறந்து வியாபாரம் செய்யுமாறு கடை உரிமையாளர்களை நிர்ப்பந்தித்த போதும் கடைகள் திறக்கப்படவில்லை.

ஹர்த்தால்இன்னும் அனுஷ்டிககப்படவுள்ளதாக ஹர்த்தால் அனுஷ்டிப்பு ஏற்பாட்டாளர்கள தெரிவித்துள்ளனர். (ம)

## அபிவிருத்தி தொண்டர்க்கான நியமனக் கடிதங்கள் நாளை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தித் தொண்டர்களிற்கான நேர்முகப்பரீட்சையில் தகுதிபெற்றோருக்கான நியமனக்கடிதங்கள் நாளை 9ம் திகதி வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சின் யாழ். அலுவலகத்தில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கப்படவுள்ளது.

இவர்களிற்கான பயிற்சி வகுப்புக்கள்அன்றையதினமே பிரதேச செயலர்பிரிவு ரீதியாக நடாத்தப்படவுள்ளன. இடம்பெயர்வு காரணமாக மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு வடமராட்சி பிரதேச செயலர் பிரிவிலும் பளை பிரதேச செயலர் பிரிவுக்கு சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந21

## புலிகள்தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த மாதம் 5ம் திகதி எழுதுமட்டுவாழ் முகமாலைபகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அக்கினிச் சுவாலை-1 இராணுவ நடவடிக்கை முறியடிப்பு சமரின் போது உயிரிழந்த புலிகள் விபரம் வருமாறு,

- லெப் கலைமகள் (சின்னத்தம்பி ஜேச்சந்திரவதி, யாழ்ப்பாணம)
- கப்டன் குயில் (சோமசுந்தரம் நீலவேணி யாழ்ப்பாணம்)
- மாங்கிளி (வரநாதன்- வைகண்மாலா யாழ்ப்பாணம்)
- 2ம் லெப் கானமுது (தமாரவேல் விஜிதா, முல்லைத்தீவு)
- மகளினி (நமசிவாயம் மோகனா, மல்லாவி)
- செல்வமலர் (பல்தாஸ் ஆபிரகாம்லிங்கன், உடையார்கட்டு) (வ-5)

## பலாலி படைத்தளம் செய்திக்கு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

அக்கினிச்சுவாலை ஒன்று இராணுவ நடவடிக்கையில் இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் 62 குழல் கொண்ட பல்குழல் றொக்கட்லோஞ்சர் ஆயுதத்தை உபயோகித்து தாக்குதல் நடத்தினரென யாழ் மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தெரிவித்ததாக வெளியான செய்தியை பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமை அலுவலகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் செய்திக்குறிப்பொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அச்செய்திக்குறிப்பில்,

யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா அக்கினிச்சுவாலை ஒன்று நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் 6குழல் கொண்ட பல்குழல் றொக்கட் லோஞ்சர் மூலம் தாக்குதலை நடத்தினர் என்றே குறிப்பிட்டிருந்தார். ஆனால் அது செய்திப்பத்திரிகைகளில்62 குழல் கொண்ட பல்குழல் றொக்கட் லோஞ்சர் எனக் குறிப்பிடப்பட்டது தவறானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### பூரண...

ணுவத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா மற்றும் யாழ் மாவட்டஇராணுவப் பிரதித்தளபதிமேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால ஆகியோரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை அண்மையில் அக்கினிச்சுவாலை-1 இராணுவநடவடிக்கைத் தோல்வி குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பாதுகாப்புச்சபை கூடி ஆராய்ந்தன,

தோல்விக்குரிய காரணங்களை அறியும்பொருட்டு யாழ்மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா கொழும்புக்கு அழைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### தமிழ்

போராளிகள் அனைவருக்கும் பாரட்டுக்குரியவர்கள் என்றும் தெரிவித்தார்.

இவ் விருது வழங்கும் வைபவத்தில சோதிகா படையணியை சிறப்பாக வழிநடத்திய லெப்டினன் கேணல் துர்காவுக்கு கேணல் தரம் வழங்கப்பட்டது.

சாள்ஸ் அன்ரனியின் சிறப்புப் படையணி பிரிவை திறம் படவழிநடத்தியவருக்கு லெப்டினன் கேணல் தரமவழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேவேளை அனைத்துப் படையணித்தளபதிகள் போராளிகளுக்கும் தலைவரால் விருதுகள் வழங்கப்பட்டது. (ம)

### எதிர்வரும் 11ம் திகதி சேவைக்காலப் பயிற்சி

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான, சேவைக்காலப் பயிற்சி எதிர்வரும் 11ம், 12ம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலையத்தில் நடைபெறுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

பயிற்சிக்கு வரும் ஆசிரியர்கள் மைதான உடை மற்றும் உணவுஆகியவற்றுடன்காலை 8.30 மணிக்கு சமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-39)

### மூதூர்...

முஸ்லிம் இனத்தவர்களுக்குச் சொந்தமான ஏழு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டது.

இத்தீவைப்புச் சம்பவத்தினால் சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியானபொருட்கள எரிந்து நாசமாகின.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து, மூதூர் பகுதியில் இராணுவத்தினரும் பொலிசாரும குவிக்கப்பட்டு பாதுகாப்புபலப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து இலங்கைத்துறைமுக அதிகார சபைஅலுவலரானமூதூரைச் சேர்ந்த கே. எம். சலித் என்பவர் கடமையின்போது நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூதூரில் தீவைப்புச்சம்பவங்கள் மேலும் தீவிரமடையாதவகையில் அதனைக்கட்டுப்படுத்துமுகமாக பிரதேச செயலக அலுவவகத்தில் பிரதேச செயலர் ஆர். நடராசாதலைமையில் ஆலோசனைக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் சமாதான விரும்பிகள் பள்ளிவாசல் பிரமுகர்கள் திருமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்பத்திகல மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (வ

## புலிகளின் பிரதேசத்திற்கு செல்ல சுவாமி சந்திரதேவாவிற்கு பொலிஸ் அனுமதி மறுப்பு

(மட்டக்களப்பு)

அமெரிக்காவைச் சேர்ந்த இந்துமத துறவியான சுவாமி தந்திரதேவாவிற்கு மட்டக்களப்புப பகுதியிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துச்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சிறுவர் இல்லம் திறப்புவிழாவில் கலந்து கொள்வதற்கான அனுமதிகேஇவருக்கு மறுக்கப்பட்டுள்ளது.

சுவாமி தந்திரதேவா திருமலையிலிருந்துபுறப்பட்டு பட்டிருப்புப்பாலம் வழியாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு சென்றபோதேபொலிசாரால் திருப்பி அனுப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதிஇல்லாதாலேயே இவர் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம

### அரசுக்கும்

சமாதானப் பேச்சுவார்த்தைகளைமுன்னெடுப்பதற்கு தடையாகவுள்ள யுத்த நிறுத்தம் தொடர்பாகஜனாதிபதி சந்திரிக்காவின் கருத்துக்களை எடுத்துச் சென்றதூதுவர்எரிக்சொல்ஹெய்ம்லண்டனில்உள்ள அன்ரன்பாலசிங்கத்தை நாளைசந்தித்துப்பேசவுள்ளார் என்பதும் உறுதிப்படுத்தப்படாதசெய்தியொன்றுதெரிவிக்கிறது,

விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தை சந்திக்க விருக்கும் எரிக்சொல்ஹெய்ம்அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெறவுள்ளசமாதானப் பேச்சுவார்த்தைக்குஇறுதிவடிவம் எடுப்பார் எனவும் தெரிவிக்கப் படுகிறது,

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்றஜனாதிபதி யுடனான சந்திப்பின்போது சந்திரிக்கா யுத்த நிறுத்தம் தொடர்பாக வெளிப்படையான கருத்துக்களைத் தெரிவிக்காத போதும் யுத்தநிறுத்தம் தொடர்பாக சூசகமாக சில தகவல்களை தூதுவர்எரிக்சோல்ஹெய்ம் மூலம் அன்ரன் பாலசிங்கத்திற்கு அனுப்பியுள்ளார்.

இந்த விடயங்கள் யாவும் சிங்களப்பேரினவாதிகள் கையில் அகப்பட்டுவிடாதவாறு மிகவும் இரகசியமான முறையில் ஜனாதிபதி சந்திரிகா கையாண்டு வருகிறார் என்று நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வுக்கு இராணுவ நடவடிக்கை எதனையும் செய்யமாட்டாது என்றும் சமாதானப்பேச்சுக்களின் மூலமே இனப்பிரச்சினையைத்தீர்த்துக்கொள்ள வேண்டும்என்று அமெரிக்கா, கனடா, இந்தியா உட்படசர்வதேச நாடுகள் இருதரப்பினரையும் யுத்த நிறுத்தம் மேற்கொள்வதற்கான வேண்டுகோள்களை விடுத்துள்ளமையால் மறைமுக யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது,

இதனை அடுத்து இம்மாத நடுப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான இறுதிக்கட்டம் பூர்த்தியாகிவிடும் என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## சூழலைப் பாதுகாக்க புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டின் சுற்றுப்புறச்சூழலை மேலும்விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்றை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நடத்தவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய ஏற்படுத்தப்பட்டுள்ள இந்நிகழ்ச்சித்திட்டம் பிரதேச செயலர் பிரிவுரீதியாக இம்மாதம் 14ம், 15ம், 16ம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளது.

சுற்றுப்புற சூழல் அபிவிருத்தி திட்டத்தை பிரதேசசெயலர் பிரதேச சபைத்தவைவர்கள் கூட்டாக வகுத்து அபிவிருத்தி தொண்டர்மூலம் நிறைவு செய்யப்படும். [க

## கொழும்பில் வெசாக் களைகட்டவில்லை

[கொழும்பு]

கடந்த வருடங்களைப் போல் இம்முறை வெசாக் பண்டிகை கொண்டாட்டங்கள் கொழும்பில் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நடைபெற்ற வெசாக் பண்டிகை வைபவங்களில் கலந்துகொள்ள இம்முறை வெளியூர்களில்இருந்து வருகைதரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை பெருமளவாகக் குறைந்துள்ளது.

இதேவேளை வவுனியாவிலும் வெசாக்பண்டிகை அமைதியான முறையில் கொண்டாடப்படுவதாகவும் கண்டிவீதி பேலிதட்ஷனா விகாரையில் வெசாக் தினத்தை முன்னிட்டுபோதி பூசை நடைபெற்றதாகவும், இதனை வடக்குகிழக்கு மாகாணசங்கநாயக்கர் நடத்திவைத்ததாகவும் தெவிக்கப்பட்டுள்ளது. [ம

## ஜூன் மாதத்தில் தமிழாராய்ச்சி மகாநாடு

[கொழும்பு]

இவ் வாண்டுக்கான உலகத் தமிழ் ஆராய்ச்சி மகா நாடு ஜூன் மாதம் மலேசியாவில் நடைபெறவுள்ளது.

கடந்தஆண்டு கொழும்பில் நடாத்துவதற்கான சூழ்நிலைகள் இன்மையால்இம்மகாநாடு சிங்கப்பூரில் நடைபெற்றது.

இவ்வாண்டும் கொழும்பில் நடாத்தக்கூடியசூழ்நிலைகள் இன்மையால் மகா நாட்டை மலேசியாவின் தலை நகர் கோலாலம் பூரில் நடாத்த உலகத்தமிழ்தகவல் மன்றத்தினர் ஏற்பாடுசெய்துள்ளனர்.

இந்நிகழ்வில் உலகத் தமிழ் அறிஞர்கள், ஆராட்சியாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (36 21]

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சோ நிறுவனத்தாரால் இல. 15, வெள்ளார்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.